செ.வெ. எண் :444 நாள் : **16.7.2007**

<u>செய்தி வெளியீடு</u>

**மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து இன்று (16.7.2007) தலைமைச் செயலகத்தில் ஆய்வு செய்தார்கள். இந்த ஆய்வின்போது, சமூகநலத்துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், நிதித்துறைச் செயலாளர், சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறைச் செயலாளர், ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர், சமூகநல இயக்குநர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட ஒருங்கிணைப்பாளர், சமூகப் பாதுகாப்பு ஆணையர் மற்றும் உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.**

**காதுகேளாத குழந்தைகளுக்காகக் கடந்த ஆண்டில் 10 மாவட்டங்களில் தொடங்கப்பட்ட ஆரம்ப நிலை பயிற்சி மையங்கள் சிறப்பாகச் செயல்படுவது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அதிகாரிகளைப் பாராட்டியதுடன்,இவ்வாண்டில், எஞ்சிய 20 மாவட்டங்களில், மேலும் 20 ஆரம்ப நிலை பயிற்சி மையங்களைத் தொடங்கிடவும்;**

**மனவளர்ச்சி குன்றியவர்களைப் பராமரிப்பதில் தனிக்கவனம் தேவை என்பதை கருத்தில் கொண்டு, அவர்களுக்கு தேவையான உறைவிடத்துடன் கூடிய சிறப்புக் கல்வி மற்றும் தொழிற்பயிற்சி மையங்களைத் தொடங்கிட, ஆர்வத்துடன் முன்வரும் தகுதியுடைய தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு நிதி உதவி செய்வதற்காக ஏற்கெனவே 25 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதால், கடந்த ஆண்டில் 10 ஆயிரம் மனவளர்ச்சி குன்றியோருக்கு மாதம் 500 ரூபாய் வீதம் பராமரிப்பு உதவித் தொகை வழங்கிட அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், நடப்பு ஆண்டில் மேலும் 20 ஆயிரம் மனவளர்ச்சி குன்றியவர்களுக்கு மாதம் 500 ரூபாய் வீதம் மொத்தம் 30 ஆயிரம் பேருக்குப் பராமரிப்புத் தொகை வழங்கும் பணிகளை உடனுக்குடன் மேற்கொண்டிடவும்;**

**மேலும், 6 வயது வரை உள்ள மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளைப் பராமரிக்க மாவட்டத்திற்கு ஒரு மையம் வீதம் 30 ஆரம்ப நிலை பயிற்சி நிலையங்களை 1.80 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்திடவும்;**

**மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டத்தில் கடந்த ஆண்டு 45 ஆயிரத்து 999 ஏழைப் பெண்களுக்கு 69 கோடி ரூபாய் திருமண நிதியுதவி வழங்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, நடப்பு ஆண்டிற்கு அனுமதிக்கப்பட்டுள்ள 75 கோடி ரூபாய் நிதியின்மூலம் 50 ஆயிரம் ஏழைப் பெண்களுக்கு திருமண நிதியுதவி வழங்கிடவும்; நிலுவையில் உள்ள தகுதியுள்ள விண்ணப்பங்கள் அனைத்திற்கும் 31.7.2007–க்குள் நிதியுதவி வழங்கப்படவேண்டும் என்றும்; ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவை பெண்களின் மகள் திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ் 2.95 கோடி ரூபாய் செலவிலும், அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்களுக்கான திருமண நிதி உதவித் திட்டத்தில் 30 இலட்சம் ரூபாய் செலவிலும், டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு ஏழை விதவை மறுமண நிதியுதவித் திட்டத்தின்கீழ் 20 இலட்சம் ரூபாய் செலவிலும், அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண நிதி உதவித் திட்டத்தின்கீழ் 3.5 கோடி ரூபாய் செலவிலும் உரிய நேரத்தில், சரியான பயனாளிகளுக்கு நிதியுதவிகளை வழங்கிடவும்;**

**சத்துணவுத் திட்டத்தில் பயன்பெறும் 57.64 இலட்சம் மாணவ மாணவியருக்கும், மகளிர் தையல் கூட்டுறவு சங்கங்களின் 25,500 உறுப்பினர்கள் பயன்பெறும் வகையில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மூலம் செயல்படும் பள்ளிகளின் மாணவர்களுக்கும் இலவசச் சீருடைகளை விரைவில் அளித்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளவும்;**

**ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் நடப்பாண்டில் 1.5 கோடி ரூபாய் செலவில் 2300 மையங்களுக்கு எரிவாயு அடுப்பு மற்றும் பிரஷர் குக்கர்களையும்; பள்ளி சத்துணவுத் திட்டத்தின்கீழ் ஏற்கனவே அனுமதிக்கப்பட்டுள்ள ஒரு கோடி ரூபாயுடன் மேலும் ஒரு கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டு மொத்தம் இரண்டு கோடி ரூபாய் செலவில் சத்துணவு மையங்களுக்கு எரிவாயு அடுப்பு மற்றும் பிரஷர் குக்கர்களையும் உடனடியாக வழங்கிடவும்;**

**1.51 கோடி ரூபாய் செலவில் 4.77 இலட்சம் குழந்தைகளுக்கு புதிய தட்டு மற்றும் டம்ளர்கள் வழங்கிடவும்;**

**50 இலட்சம் ரூபாய் செலவில் 1667 மையங்களுக்கு புதிய சமையல் பாத்திரங்களை வழங்கிடவும் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.**

**மேலும், ஆய்வு முடிவில், ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவை பெண்களின் மகள் திருமண நிதியுதவித் திட்டம், அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்களுக்கான திருமண நிதி உதவித் திட்டம், டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு ஏழை விதவை மறுமண நிதியுதவித் திட்டம் ஆகியவற்றில் வழங்கப்படும் திருமண நிதியுதவிகளையும் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டத்தின்கீழ் வழங்கப்படுவதைப் போன்றே 10,000 ரூபாயிலிருந்து 15,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்று முதலமைச்சர் கலைஞர் அறிவித்துள்ளார். இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு 1 கோடியே 75 இலட்ச ரூபாய் கூடுதல் செலவாகும்.**

****

வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9.